2020 ஜனவரி 8]

ஒரே ஆண்டில் ரூ.3,600 கோடி நிதியை ஒதுக்கி, 9 புதிய மருத்துவக் கல்லூரிகளைப் பெற்றது ஒரு மகத்தான வரலாற்றுச் சாதனை; நாட்டு மக்களுக்கு மிகப் பெரிய ஒரு வரப்பிரசாதம். (மேசையைத் தட்டும் ஒலி) எல்லாத் தரப்பு மக்களுக்கும் இனிமேல் case referral*—ஏ இருக்காது. ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத்திற்கு ஒரு* case*—ஐ* refer *செய்கிற விஷயமே இருக்காது. கடலூர் மாவட்டத்திலிருந்து இனிமேல் பாண்டிச்சேரிக்கு* refer *செய்ய வேண்டாம்; இனிமேல் அரியலூரிலிருந்து தஞ்சாவூருக்கோ, சென்னைக்கோ* refer *செய்ய வேண்டாம்; கள்ளக்குறிச்சியிலிருந்து விழுப்புரத்திற்கு இனிமேல்* refer *செய்ய வேண்டாம்; திருவள்ளூரிலிருந்து சென்னைக்கு* case refer *செய்ய வேண்டாம். இது எவ்வளவு பெரிய விஷயம். அந்தந்த மாவட்டத்திலேயே, தரமான சிகிச்சை பெற ரூ.365 கோடியில் ஒரு மகத்தான திட்டத்தை இன்றைக்கு மக்கள் நல்வாழ்வுத் துறை வழங்கியிருக்கிறது. எனவே, தயவுசெய்து இதில் குற்றம் சொல்ல வேண்டாம் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு மூத்த அமைச்சராக இருந்த அண்ணன் அவர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 15, மாண்புமிகு உறுப்பினர் திரு.* L. *இதயவர்மன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

15—

வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்

***51922—திரு. L. இதயவர்மன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்போரூர் தொகுதி, திருப்போரூர் பகுதியில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

செங்கல்பட்டு வட்டம், செங்கல்பட்டு வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தின்கீழ் செங்கல்பட்டு, திருப்போரூர், மதுராந்தகம், திருக்கழுக்குன்றம், செய்யூர் ஆகிய தாலுகாக்கள் உள்ளன. ஒரு

புதிய பகுதி அலுவலகம் துவங்குவதற்கு குறைந்தபட்சம் 2,500 போக்குவரத்து வாகனங்களும், ஒரு வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் துவங்குவதற்கு குறைந்தபட்சம் 7,500 போக்குவரத்து வாகனங்களும் இருப்பது அவசியமாகிறது. மேலும், தற்போது திருப்போரூர் தொகுதிக்குட்பட்ட திருக்கழுக்குன்றம் தாலுகாவில் மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகம் இயங்கிவருகிறது. திருப்போரூர், செங்கல்பட்டு வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திலிருந்து 24 கி.மீ. தூரத்திலும், திருக்கழுக்குன்றம் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திலிருந்து 25 கி.மீ. தூரத்திலும் அமைந்துள்ளது. திருப்போரூர் தாலுகாவில் தற்போது 739 போக்குவரத்து வாகனங்களும், 7,552 போக்குவரத்து அல்லாத வாகனங்களும் உள்ளன. எனவே, புதிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. L. இதயவர்மன் அவர்கள்.

திரு. L. இதயவர்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்றும் எங்கள் இதயம் நிறைந்த திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர், முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் துயில் கொண்டிருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். உள்ளாட்சித் தேர்தலில் அதிக இடங்களில் வெற்றி பெற்ற வெற்றி நாயகன், வருங்கால முதல்வர் எங்கள் அண்ணன் தளபதியார் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) திருப்போரூர் பகுதி, சென்னையை ஒட்டியுள்ள புறநகர்ப் பகுதி; வளர்ந்துவரும் பகுதி ஆகும். திருப்போரூர் பகுதியில் OMR சாலை, ECR சாலை, கேளம்பாக்கம்—வண்டலூர் சாலை ஆகிய சாலைகள் உள்ளன. இப்பகுதியில் I.T. நிறுவனங்களும், பல அடுக்குமாடிக் குடியிருப்புகளும் உள்ளன. கடந்த சில ஆண்டுகளாக ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் அப்பகுதிக்குக் குடிபெயர்ந்துள்ளதால், வாகனங்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றன. ஆகவே, இப்பகுதியில் வசிக்கும் பொது மக்கள் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் சம்பந்தமான அனைத்துப் பணிகளையும், சுமார் 30 கி.மீ. தொலைவில் உள்ள செங்கல்பட்டு வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சென்று மேற்கொள்ள வேண்டிய நிலை உள்ளது. அல்லது 25 கி.மீ. தொலைவிலுள்ள திருக்கழுக்குன்றத்தில் உள்ள

2020 ஜனவரி 8]

வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் செல்ல வேண்டிய நிலை உள்ளது.

முற்பகல் 11–55

வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் web *வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருந்தாலும், வெறும் விண்ணப்பங்களை மட்டுமே பதிவேற்றம் செய்ய முடிகிறது. வாகன ஓட்டும் திறனைப் பரிசோதித்து தேர்வு செய்தல், ஓட்டுநர் உரிமம் பெறுதல், வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள் வாகனங்களை ஆய்வு செய்தல் உள்ளிட்ட அனைத்துப் பணிகளுக்கும் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் செல்ல வேண்டிய நிலைதான் உள்ளது. ஆகவே, பொது மக்கள் நலன் கருதி, திருப்போரூர் பகுதியில் வட்டாட்சியர் அலுவலகம் உள்ளதுபோல், வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தையும் அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கின்ற அந்தப் பகுதியில் மிகக் குறைவான எண்ணிக்கையிலான வாகனங்களே இருக்கின்றன. 25 கி.மீ. தூர இடைவெளியில் ஒரு பகுதி அலுவலகமோ அல்லது வட்டாரப் போக்குவரத்து ஆய்வாளர் அலுவலகமோ இருக்க வேண்டுமென்ற அடிப்படையிலே, அந்தப் பகுதி அலுவலகங்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கின்ற பகுதி, வளர்ந்து வருகின்ற பகுதியாக இருக்கின்ற காரணத்தால், தேவை ஏற்படுமாயின், அதை இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. L. இதயவர்மன் அவர்கள்.*

திரு. L. இதயவர்மன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்போரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தையூர் ஊராட்சி அருகே மாநகரப் போக்குவரத்துப் பணிமனை*

[2020 ஜனவரி 8

அமைப்பதற்காக ஏற்கெனவே இடங்கள் ஆய்வு செய்யப்பட்டு, இடம் தேர்வு செய்யப்பட்டுவிட்டது. பொது மக்களின் நலனுக்காகவும், போக்குவரத்து நெரிசலைக் குறைக்கவும், தையூர் பகுதியில் புதிய போக்குவரத்துப் பணிமனையை உடனடியாக அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அரசினைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், தொகுதி மக்களின் நலன் கருதி, நெம்மேலியில் இயங்கிவரும் அரசு கல்லூரிக்கு, திருப்போரூர் பகுதியிலிருந்து கோவளம் வழியாக அரசு மாநகர மினி பேருந்தினை இயக்க வேண்டுமென்று அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், தொகுதி மக்களின் நலன் கருதி, திருப்போரூரிலிருந்து, திருவிடந்தை, மாமல்லபுரம், திருக்கழுக்குன்றம் ஆகிய கோயில் பகுதிகளை இணைக்கும் வகையில், சுற்றுவட்ட அரசு மாநகரப் பேருந்து இயக்கிட வேண்டுமென்று அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். திருப்போரூர் கோயில் நகரத்தில் இயங்கிவரும் அரசு மாநகரப் பேருந்து நிலையம் சிறிய அளவில் உள்ளதால், அந்தப் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தித் தருமாறு தொகுதி மக்களின் சார்பில் இந்த அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

திருப்போரூர் தொகுதி, மாமல்லபுரத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க சிற்பங்கள் அதிகம் உள்ளன. அப்பகுதி, சுற்றுலாத்தலமாக உள்ளது. அங்கு வெளிநாட்டினர் அதிகம் வருகின்ற காரணத்தால், அங்கே வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த நவீன பேருந்து நிலையம் ஒன்றை அமைத்துத் தர வேண்டுமென்று இந்த அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். கோயில் நகரமான திருப்போரூர் முருகன் கோயிலிலிருந்து, குன்றத்தூர் முருகன் கோயில் வரை அரசு மாநகரப் பேருந்து இயங்கி வந்தது. அந்தப் பேருந்து தற்போது இயக்கப்படாமல் நிறுத்தப்பட்டுவிட்டது. அதை உடனடியாக மீண்டும் இயக்க இந்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கெனவே 5–7–2019 அன்று நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத்தில் அடையாறிலிருந்து, கேளம்பாக்கம், செங்கன்மால், தையூர், காயார், வெண்பேடு, அம்மாபேட்டை மருத்துவமனை வழியாக நெல்லிக்குப்பம் வரை புதிய வழித்தடத்தில் மாநகரப் பேருந்து இயக்கிட வேண்டுமென்று இந்த அரசை வலியுறுத்திக் கேட்டுள்ளேன். இதுவரை இந்த அரசு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே, அதன்மீது அரசு நடவடிக்கை எடுத்து, பொது மக்கள் பயன்பாட்டிற்காக அந்தப் பேருந்தை இயக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

2020 ஜனவரி 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லாத நிறைய கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். பேருந்து நிலையங்கள் அமைக்கப்படுவது என்பது உள்ளாட்சித் துறையின்கீழ் வரக்கூடியது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தெந்த வழித்தடத்தில் பேருந்துகள் இயக்க வேண்டும் என்பது குறித்து எழுத்துபூர்வமாக விவரத்தைக் கொடுத்தாரேயானால், அதிகாரிகளை அனுப்பி ஆய்வு செய்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும் பகுதிகளில் நிச்சயமாக மாண்புமிகு அம்மாவின் அரசு பேருந்துகளை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. தகவல் கோரல்

'நீட்' தேர்வினை இரத்து செய்ய உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு வழக்கு தொடர்ந்திருப்பது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

***திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் 'நீட்' தேர்வை இரத்து செய்ய வேண்டுமென்று சொல்லி உச்ச நீதிமன்றத்தில் அரசு மனு தாக்கல் செய்திருப்பதாக செய்திகள் தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றன. 'நீட்' தேர்வு விண்ணப்பிப்பதற்கான கடைசி நாள் 6–1–2020.*